

# மின்மினி



ஜூன் 2020 மின்னல் 3, கதிர் 2

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல" ... குறள்: 4

## சங்கமம் தமிழ்ப்பள்ளி 2020-2021 கல்வி ஆண்டு தொடக்கம் பற்றிய அறிவிப்பு

வணக்கம் பெற்றோர்களே. LCPS தனது 2020-2021 பள்ளி ஆண்டை ஆகஸ்ட் 27, 2020 அன்று தொடங்க ஆயத்தமாகிறது. சங்கமம் தமிழ் பள்ளி LCPS நாட்காட்டியை பின்பற்றுவதால், ஆகஸ்ட் 29, 2020 சனிக்கிழமையன்று பள்ளியை தொடங்க ஆயத்தமாகிறது. COVID-19 நிலைமை குறித்த நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, நமது பள்ளி ஆண்டைத் தொடங்க சங்கமம் தமிழ்ப்பள்ளி பின்பற்றக்கூடிய சில சாத்தியக்கூறுகள் கீழ்வருமாறு.

1. மெர்சர் நடுநிலைப்பள்ளியில் வழக்கம் போல் தமிழ் வகுப்புகள்
2. இணையதளம் மூலம் நிகழ்நிலை தமிழ் வகுப்புகள்
3. மெர்சர் நடுநிலைப்பள்ளி கிடைக்கும் வரை இணையதளம் மூலம் நிகழ்நிலை வகுப்புகள்; பிறகு மெர்சர் நடுநிலைப்பள்ளியில் வழக்கம் போல் வகுப்புகள்

வரவிருக்கும் மாதங்களில், மெர்சர் நடுநிலைப்பள்ளி மற்றும் எல்.சி.பி.எஸ் உடன் பணியாற்றி பள்ளிவசதிகள் பற்றிய தகவல்களை தெரிவிக்கிறோம். உங்கள் ஒத்துழைப்பை அன்புடன் எதிர்பார்க்கும்

சங்கமம் பள்ளி நிர்வாகக்குழு

**2020-2021 பள்ளி ஆண்டுக்கு உங்கள் குழந்தையை மீண்டும் பதிவு செய்ய:**


கூகிள் இணைப்பு: https://sangamamtamilschool.org/2020-21-student-registration-form/

**2020-2021 பள்ளி ஆண்டுக்கான புதிய மாணவர்கள் பதிவு செய்ய**

இணையத்தில்: https://sangamamtamilschool.org/2020-21-student-registration-form/

கேள்விகள்? reachus@sangamamtamilschool.org (571-207-6787)

## இப்படை தோற்கின்...



நாம் அனைவரும் அறிவோம், சமீபத்திய கொரோனா தொற்று நம் வாழ்க்கையைப் புரட்டி போட்டு விட்டது. நாம் எவ்வாறு தமிழ்ப்பள்ளியை நடத்துவோம், கற்றலில் தொடர்ச்சியை உறுதி செய்வோம் என்ற எண்ணங்கள் ஒருபக்கம் ஓட, யோசிக்கவோ திட்டமிடுவவோ முடியாமல் சூழ்நிலை அதிவேகமாக மாறிக்கொண்டே இருந்தது

இரண்டாம் பருவ தேர்வுகளுக்கு இடையே பள்ளிகள் மூடப்படுமென்று லௌடன் பள்ளி நிர்வாகம் திடீர் என்று அறிவித்தது. சில குழந்தைகள் முன்னராகவே தேர்வு எழுதியிருந்தனர், மற்ற குழந்தைகள் தேர்வுக்கு படித்த

நிலையில் மாற்றுத்தேர்வு தேதி இன்றி காத்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் ஆசிரியர்களுடன் ஓர் அவசரக்கூட்டம் நடத்தினோம். ஆசிரியர்கள் நிகழ்நிலை இரண்டாம் பருவத்தேர்வு குறித்தும் வகுப்புகள் மேற்கொள்வது பற்றியும் ஆலோசனை செய்தனர். வெகுவிரைவாக திட்டமிட உதவினர். நமது ஆர்வலர்கள் குழு நிகழ்நிலை வகுப்புகள் நடத்த தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து தேர்வு செய்யும் பணியில் இறங்கினர். ஆசிரியர்கள் அனைவரும் இப்புதிய சவாலை ஏற்று நிகழ்நிலை தேர்வு நடத்தி முடித்தனர், ஒரே வாரத்தில் வகுப்புகளையும் தொடங்கினர். இன்று வரை தமிழ்ப்பள்ளி தங்குதடை இன்றி சிறப்பாக நடந்து வருகிறது. அதுமட்டும் அல்ல.. வசந்தகால இடைவெளி, போர் வீரர் நினைவு நாள் போன்ற விடுமுறை நாட்களிலும் பல வகுப்புகள் நடந்தேறுகின்றன.


வெப்கேம் வழியாக ஆசிரியர்களையும் குழந்தைகளையும் காண முடிவது நேர்வழி வகுப்புகள் அனுபவத்தை மிகவும் சிறப்பாக்குகிறது. நமது ஆசிரியர்கள் குழந்தைகளை ஈடுபடுவதற்கான ஆக்கப்பூர்வமாக புதிய முயற்சிகளை மேற்கொள்கின்றனர் - முன்பே பதிவுசெய்யப்பட்ட பாடங்களை பகிர்ந்தோ, நேரலை வகுப்புகளைப் பதிவு செய்தோ குழந்தைகளுடன் பகிர்கின்றனர்.

வீட்டிலிருந்து வேலை செய்வதை நிர்வகிப்பது, குழந்தைகளை கவனித்துக்கொள்வது, சமையல் செய்வது என்று மூச்சு விடுவதற்கே நேரம் இல்லாத நிலையில் இந்த இமாலய முயற்சியை சிறிதும் தயக்கமின்றி வெற்றிகரமாக மேற்கொண்ட ஆசிரியர்களுக்கு பெரும் நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். குழந்தைகளின் ஒழுங்கான வருகையும் பெற்றோரின் ஆர்வமும் எங்களுக்கு மிகுந்த ஊட்டமளிக்கிறது.

அடுத்த கல்வி ஆண்டுக்குள் கால் எடுத்து வைக்கும் இத்தருணத்தில் எச்சவாலையும் எதிர்கொண்டு வெற்றியோடு வெளிவர பேராதரவாக இருக்கும் சங்கமம் குழுமத்திற்கு நன்றிகள். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!!

- ஸ்ரீனிவாஸ் சுந்தரகோபால்

## ஓவியம்: கதிரவ அமைப்பு (***Solar System***) அல்லது சூரிய மண்டலம்






ரித்விக் கார்த்திக்
நிலை 1 "B"

## ஓவியம்: மலர்கள் தோட்டம்




## ஓவியம்: என் ஆசிரியர்











**பேச்சுத்தமிழ் வகுப்பு மாணவர்களின் பேச்சுத்திறமையை அறிய ஆவலா?**


Pease visit the link below and watch the videos titled:

1) Speech Class – Feb 2020 (Video1)

http://sangamamtamilschool.org/செய்திமடல்-newsletter/




ஓவியம்: கோயில் கோபுரம்






ஷமிதா மகேஷ்

**உங்களைப் பற்றி**

"புதுவையில் பிறந்து, சென்னையில் வளர்ந்து, பின்னர் திரைகடல் ஓடி திரவியம் தேடி வந்தவன். தமிழ் மீதுள்ள அன்பால், பற்றால் சென்ற வருடம் தன்னார்வலராக சேர்ந்து பின்னர் ஆசிரியராக பணிபுரியும் வாய்ப்பு பெற்றவன்."

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

மிகவும் திறமையான சுட்டிப் பிள்ளைகள். மாணவர்கள் கேட்கும் கேள்வி, என் போன்றவர்களை வகுப்பிற்கு மேலும் உற்சாகமாக தயார் செய்ய வைக்கிறது.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

ஒரு நாள், ஒரு மாணவியின் பெற்றோர் வகுப்பில் வந்து என்னிடம் சொன்னார்கள்: "அவர்களின் மகள் தமிழ் பள்ளிக்குச் சென்ற பிறகுதான், தன் தாத்தா பாட்டியிடம் தொலைபேசியில் நன்றாக தமிழில் பேசுகிறார் என்று", அது என் போன்ற ஆசிரியர்களுக்கு பெருமை சேர்ப்பதாக எண்ணுகிறேன்.



இளவரசு நாராயணசாமி
(நிலை 2A)

**உங்களது பொழுதுபோக்கு**

என் குழந்தைகளுடன் விளையாடுவது, இசை கேட்பது, கூடைப்பந்து மற்றும் கைப்பந்து விளையாடுவது.

**உங்களைப் பற்றி**

நான் ஒரு தொழில்நுட்ப பொறியாளர். இப்போது என் இரண்டு குழந்தைகளையும் கவனித்துக்கொள்கிறேன். எனக்கு தமிழ் மொழி மீது மிக மரியாதை உண்டு, எனது அறிவை இளைய தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

நிலை 5A மாணவர்கள் மிகவும் திறமையானவர்கள். தங்கள் வீட்டுப்பாடங்களை அர்ப்பணிப்புடன் செய்வதுடன், தேர்வுகளிலும் முன்னேற்றத்தையே காட்டினர்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

எனது மாணவர்களுக்கு நல்ல நகைச்சுவை உணர்வு இருப்பதால் வகுப்பறை எப்போதும் உயிரோட்டமாக இருக்கும்

**உங்களது பொழுதுபோக்கு**

என் குழந்தைகளுடன் இருப்பது மற்றும் சமைப்பது.



ரஞ்சனி கார்த்திக்
(நிலை 5A)

**உங்களைப் பற்றி**

தமிழ் கற்பிப்பதிலும் அதை மழலை மொழியில் கேட்பதிலும் ஆர்வம் கொண்ட ஆசிரியர்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

கற்பிக்கும் பொழுது அகல விரியும் கண்கள், தமிழுக்கு புதிய பரிமாணம் தரும் மழலை சொற்கள், பாராட்டுக்கு பெருமிதம் கொள்ளும் பாங்கு .....என்ன அழகு இந்த குட்டி செல்வங்கள்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

பிடித்த பொம்மையை பற்றி பல விசயங்கள் 10 நிமிடம் பேசிய குழந்தையிடம் " உனக்கு அவ்வளவு பிடிக்குமா என்று கேட்டதற்கு " எனக்கு பிடிக்காத பொம்மையே இது தான் " என்றான் பாருங்கள்.நான் ஆச்சரியத்தில் பின் ஏன் என்றதற்கு " என் அம்மா தான் " என்றான். அம்மா செல்லி தந்ததை அழகாக பகிர்ந்த விதம் , இன்னும் கொஞ்சம் என்று பல தகவலை சுவாரஸ்யமாக குழந்தைக்கு அம்மா ஊட்டிய விதம்,என்னை வியக்க வைத்தது. நானும் அன்னறய தினம் பெங்குயினைப் பற்றி நிறைய கற்றுக் கொண்டேன்.



**ராணி சுதாகர்**
(மழலை - A )

**உங்களது பொழுதுபோக்கு**

வெயில் காலத்தில் சிறிய தோட்டம் வளர்பது, திரைப்படம் பார்பது , நண்பர்களுடன் ஊர் சுற்றுவது.

## சங்கமம் ஆசிரியர்கள் - 2019-2020

**உங்களைப் பற்றி**
நான் ஒரு இல்லத்தரசி, எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். எனக்கு சமைக்க பிடிக்கும்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
அழகான மற்றும் புத்திசாலி குழந்தைகள், பாடம் கற்றுக்கொள்ள மிகவும் ஆர்வமானவர்கள் .

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**
Halloween அன்று ஒரு மறக்கமுடியாத நிகழ்வு - மாணவர்கள் தங்கள் சொந்த சூப்பர் ஹீரோக்களின் கதைகளைச் சொன்னது மிக அருமை.

**உங்களது  பொழுதுபோக்கு**
கைவினை, தோட்ட வேலை மற்றும் குழந்தைகளுடன் விளையாடுவது.



**சந்தியா  பிரபு**
(மழலை)

**உங்களைப் பற்றி**
நான் ஒரு கணினி அறிவியல் பட்டதாரி. தாய்மொழி தமிழ் என்பதால் மாணவர்களுக்கு அவ்வறிவை அளிக்க உத்தேசித்துள்ளேன். நான் ஒரு உற்சாகமான ஆசிரியர். சிறிய குழந்தைகளுடன் பழக விரும்புகிறேன், இளம் உள்ளங்களை நன்கு வடிவமைக்க விரும்புகிறேன். ஆகஸ்ட் 2019 முதல் சங்கமம் தமிழ் பள்ளியில் தொடக்க வகுப்புகளை (5 -6 வயது குழந்தைகள்) கையாண்டு வருகிறேன். குழந்தைகள் எழுத்துக்கள், கவிதை மற்றும் கதைகளைக் கற்றுக்கொள்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
மாணவர்கள் உற்சாகமாக இருக்கும் ஒரு வகுப்பையே விரும்புகிறார்கள். அவர்களின் நேரத்தையும், தமிழ் மொழி கற்றலின் முயற்சியையும் நான் மிகவும் மதிக்கிறேன். இதைச் செய்ய முதுகெலும்பாக இருக்கும் மாணவர் மற்றும் பெற்றோர் அனைவருக்கும் எனது சிறப்பு நன்றி.



மஞ்சு பாலகிருஷ்ணன்
(நிலை 1B)

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**
ஓ' மற்றும் 'ஓவியம்' பற்றி கற்றுக் கொள்ளும்போது, குழந்தைகள் வகுப்பில் தங்கள் சொந்த வரைபடங்கள் / ஓவியங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் ஒரு மாணவி ஒரு பெண் படத்தை வரைந்து 'என் ஆசிரியர்' என்று குறிப்பிட்டு எனக்கு அனுப்பினார். அந்த தருணத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியடைத்தேன், எங்கள் பள்ளியின் மின்மினி வெளியீட்டிற்காக அவர்களின் அனைத்து ஓவியங்களையும் இணைத்தோம்.

**உங்களது  பொழுதுபோக்கு**
எனக்கு சமையல் ('ஸ்ட்ரெஸ் பஸ்டர்' ) மற்றும் இசையைக் கேட்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு .

**உங்களைப் பற்றி**
அமெரிக்காவில் வாழும் சராசரி தமிழன் .இங்கு வளரும் அடுத்த தலை முறை சராசரி தமிழனை விட தமிழ் பற்று அதிகமாக வர வேண்டும் என்பதே என் அவா. அதற்க்கு சங்கமம் போன்ற ஒரு குழுமம் மூலம் எம்மால் முடிந்ததை செய்கிறேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
வைரங்கள். எல்லோரும் தனி திறமை கொண்டவர்கள், அவர் அவர் பெற்றோர் உழைப்பினை பொறுத்து அவர்களின் ஒளி வேறுபடுகிறது

**உங்களது  பொழுதுபோக்கு**
இயற்கையை தேடுவதும் , தமிழில் பாடல்கள் எழுதுவதும் .



லோகநாதன்
(நிலை 4B)

ஓவியம்: கோயில் கோபுரம்






தியா சுதாகர்
நிலை 1 "B"

ஓவியம்: யானை





அனன்யா
அனுப்
நிலை 1 "B"

## விடுபட்ட வார்த்தையை நிரப்புங்கள் பார்க்கலாம்

1. தாகமாக இருக்கு ,................ கொடுங்கள். ( **தண்ணீர் , கண்ணீர்** )
2. மணி அடிக்கிறது , .................. திறங்கள். ( **பையை , கதவை** )
3. குழந்தை அழுகிறது , ................ கொடுங்கள். ( **அடி , பால்** )
4. பொம்மை வாங்க வேண்டும் ,................... கொடுங்கள். ( **பணம் , காகிதம்** )
5. நண்பனுடன் ................. விளையாட போகிறேன் . ( **சந்து ,பந்து** )
6. தாத்தாவை பார்க்க ................... ஏறி செல்ல வேண்டும் . ( **பெட்டி , விமானம்** )
7. தலை சீவ வேண்டும் ....................... எங்கே? ( **சீப்பு , பொட்டு** )
8. எனக்கு .................. சாப்பிட ரொம்ப பிடிக்கும் . ( **பாவக்காய் , மிட்டாய்** )
9. நான் ........................... மேல் தூங்குவேன் . ( **காரின் , மெத்தை** )
10. கடையில் எனக்கு பிடித்த ...................... நிறைய இருக்கும் . ( **நண்பன் , பொம்மை** )



# திருக்குறள் போட்டி முடிவுகள்



இந்தக் கல்வி ஆண்டுக்கான திருக்குறள் போட்டி பிப்ரவரி 8, 2020 அன்று நமது பள்ளியில் செவ்வனே நடைபெற்றது. இதில் எழுபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குப்பெற்று நம்மை பெருமையில் ஆழ்த்தினர்.

இம்முறை, திருக்குறள் போட்டி நிலை வாரியாக நடத்தப்பட்டது. மழலை மாணவர்கள் ஆத்திச்சூடியும், மற்ற நிலை மாணவர்கள் திருக்குறளும் ஒப்பித்தனர். இந்த போட்டிக்கு நம் பள்ளி பெற்றோர்கள் சிலரும், வெளியிலிருந்து சில தமிழ் ஆர்வலர்களும் நடுவர்களாக அழைக்கப்பட்டனர். முன்பே அறிவித்திருந்தப்படி பங்குப்பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் 10 புதையல் சீட்டுகள் வழங்கப்பட்டன.

| நிலை | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| மழலை | ராகுல் ஜீவா | அஷ்வத் ராஜ்குமார் | மேதினி ராஜேஷ்குமார் |
| நிலை 1 | சர்வேஷ் சதீஷ் | அகிலன் பிரசன்னா | தியா சுதாகர் |
| நிலை 2 | சௌந்தர்யா ஸ்ரீநிவாசன் | பிரணவ் இளவரசு | கிரிஷாந்த் காளிதாஸ் |
| நிலை3 | தீரா அருண் | - சரண்யா குமார், - நந்தனா கமலேஸ்வரன் | ஸ்ருதி முத்துக்குமரன் |
| நிலை 4 | கீர்த்திஸ்ரீ ஞானவேல் | அன்விதா ராம்குமார், -பிரஜித் அரவிந்தன்ராமகிருஷ்ணன் | தனிஷ்கா ரேகா பிரேம்குமார் |
| நிலை5 | கிரித்தி க்ரவிச்சந்திரன் | ஜெய் சுமேத் மன்னிகா கோபிகிருஷ்ணன் | கண்மணி ஜெய்பிரகாஷ் |
| நிலை 6 | கபிலன் பிரசன்னா | | |
| நிலை 7 | தேஜவி குமார் | | |
| பேச்சு1 | ஷ்ரியா முராரி | | |
| பேச்சு2 | அர்ஜுன் வினோத் | அதுல்யன் ஸ்ரீவத்சன் | |

# சங்கமம் ஆசிரியர்கள் - 2019-2020

**உங்களைப் பற்றி**
நான் ஆஷ்பர்னில் வசிக்கிறேன். மகிழ்ச்சியான இல்லத்தரசி. இரண்டு இனிமையான பையன்களின் தாய்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
என் குழந்தைகள் மிகவும் இனிமையானவர்கள், அன்பானவர்கள், ஒழுக்கமானவர்கள்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**
ஆப்பிள் வாழை மா விளையாட்டு நாங்கள் தமிழில் விளையாடியது. குழந்தைகளும் அதை ரசித்தனர்.

**உங்களது  பொழுதுபோக்கு**
DIY கைவினைப்பொருட்கள், ஒழுங்கமைத்தல் மற்றும் வரைதல்.


காவேரி சொக்கலிங்கம்
(நிலை 2B)

**உங்கள் பெயர்: யோகேஸ்வரி கோபிகிருஷ்ணன்**
**வகுப்பு: நிலை 6**

**உங்களைப் பற்றி**
பிறந்து வளர்ந்தது மதுரை. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மண்ணில் பிறந்ததினாலோ ஏனோ... வீட்டில் பிறமொழி பேசினாலும் தமிழ் மீது ஒரு தனி பிரியம். நான் கடந்த 4 ஆண்டுகளாக சங்கமம் தமிழ் பள்ளியில் ஆசிரியையாக இருக்கிறேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதம் என்பதை இந்த வருட மாணவர்களும் காட்டி உள்ளனர். எங்கள் மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் சுவாரஸ்யமாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் மாணவர்கள். அதே சமயத்தில் எங்களுக்கும் பல சுவாரஸ்யமான நிகழ்வுகள் காத்திருக்கும்.

**உங்களது பொழுதுபோக்கு**
என் குடும்பத்துடன் நேரம் செலவிடுவது.

**உங்களைப் பற்றி**
நான் சங்கீதா. இளநிலை பொறியாளர். எந்த சூழ்நிலை ஆனாலும் கவலைப்படாது ,புன்னகையுடன் அதை எதிர்கொள்வதில் நாட்டம் கொண்டவள் .கடமைக்கு செய்தால் தோல்வி , கடமையை செய்தால் வெற்றி என்று நம்பிக்கையுடன் கடமை புரிபவள்.


**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
என் மாணவர்கள் அனைவருமே ஒவ்வொரு நவரத்தின கற்கள். கற்களை பட்டை தீட்டினால் ஒவ்வொரு கற்களும் விதவிதமாக ஜொலித்து அதன் சக்தியை பிரகாசமாக வெளிப்படுத்தும் . அதுபோன்று நாம் அவர்களை பட்டை தீட்டும் போது ,ஒவ்வொரு மாணவர்களின் தனித் திறமையையும் பிரகாசமாக வெளிப்படும் என்று திட்டவட்டமாக நம்புகிறேன்.


சங்கீதா
(நிலை 5B)

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**
ஒரு மாணவி தன் தாத்தா பாட்டியுடன் கிராமத்தில் விடுமுறையை கழித்த சம்பவம் பற்றி கூறினார் . விவசாயிகள் நாற்று நடுவதை, நீர் பாய்ச்சுவதையும் ,தாத்தா பாட்டியுடன் பல்லாங்குழி, தாயம் ஆடியதையும் மகிழ்வுடன் கூறினார் .நகரத்தில் வாழ்பவரே இதை காண்பது அரிதாக இருக்கும்பொழுது ,மாணவி கூறியது கேட்க சுவாரஸ்யமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

**உங்களது  பொழுதுபோக்கு**
தோட்டம் அமைத்து, காய்கறிகள், கீரை வகைகள் ,பூச்செடிகள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் உண்டு. விதவிதமாகச் சமைப்பதில் , கைவினைப் பொருட்கள் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு. குழந்தைகளுடன் இனிமையாக பேசி விளையாடி பொழுது போக்குவதும் மிகவும் பிடிக்கும்.

## சங்கமம் ஆசிரியர்கள் - 2019-2020



ஜெயகுரு சீத்தாராமன்
(நிலை 5B)

**உங்களைப் பற்றி**

தமிழ் ஆர்வலர். நிறைய புத்தகங்கள் படிப்பேன். டெக்னாலஜி பற்றி படிப்பது எனது முதல் விருப்பம். வரலாறு மிகவும் பிடிக்கும். பல நாடுகள் மற்றும் அவர்கள் கலாசாரத்தை அறிய முயற்சி செய்து கொண்டு உள்ளேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

மிக சிறந்த மாணவர்கள். அனைவரும் ஓரளவுக்கு தமிழ் பேசுபவர்கள். இவர்களுக்கு கற்று கொடுப்பது எனக்கு ஒரு மகிழ்ச்சியான அனுபவம்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

ஒவ்வொரு வகுப்பும் எனக்கு சுவாரசியமானது தான். ஒருமுறை வகுப்பில் வாக்கியம் அமைக்க பயிற்சி செய்தோம். மூன்றே வார்த்தைகள் கொண்டு படித்த வேற்றுமை உருபு கொண்டு 56 வாக்கியம் அமைக்கலாம் என்ற போது மாணவர்கள் ஆச்சர்யபட்டர்கள். ஆனால் அவர்களே அத்தனை வாக்கியங்களை அமைத்த பொழுது மாணவர்கள் மகிழ்ச்ச்சியையும் தன்னம்பிக்கையயையும் வெளிப்படுத்தினர். மிக சுவாரசியமாக இருந்தது வகுப்பு.

**உங்களது பொழுதுபோக்கு**

டிவி பார்ப்பது, குழந்தைகளுடன் விளையாடுவது, இசை கேட்பது மற்றும் பலவகையான உணவு வகையை சுவைப்பது.



அனிதா செந்தில்
(நிலை 2A)

**உங்களைப் பற்றி**

சங்கமம் பள்ளியில் இது என்னுடைய மூன்றாம் ஆண்டு பங்களிப்பு.
நமது தாய்மொழியை பள்ளி குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பதில் பெரும் மகிழ்ச்சி.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

ஒருமுறை "ஞ்-இஞ்சி" பற்றி பாடம் எடுத்த போது இஞ்சியை சுவைத்து பார்க்குமாறு பயிற்சி குடுத்துஇருந்தோம். அடுத்த வாரம் குழந்தைகள் பச்சைமிளகாய் தங்கள் பெற்றோர்களுக்கு சுவைத்து பார்க்கும் பயிற்சியை கொடுக்குமாறு வேடிக்கையாக கேட்டுக்கொண்டார்கள்.. விரைவில் நிலை-2ஆ பெற்றோர்களே தயாராயிருங்கள்!!

**உங்களது பொழுதுபோக்கு**

பாட்டுக்கேட்பது ,தோட்டக்கலை



யுவநந்தன் வளவன்
(நிலை 4A)

**உங்களைப் பற்றி**

நான் படிப்பால் ஒரு இண்டஸ்ட்ரியல் என்ஜினீயர், அனால் இப்பொழுது பைனான்ஸ் துறையில் வேலை செய்கிரேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**


எனது வகுப்பு மாணாக்கர்கள் மிகவும் சமர்த்து, ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள். அவர்களுக்கு மிகவும் ப்ரிகாசமான எதிர்காலம் அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. எவ்வளவு வேலை பளு இருந்தலும் சனிக்கிழமைகளில் மாணவர்களுடன் செலவழிக்கும் நேரம் ஒரு புத்துணர்ச்சியும், மகிழ்ச்சியும் அளிக்கும்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**


வகுப்பில் ஆண்கள் அணி மற்றும் பெண்கள் அணி என பிரித்து போட்டி கேள்விகள் கேட்ட பொழுது அனைவரும் மிகுந்த ஆர்வத்துடனும், புத்துணர்ச்சியோடும் பங்கேற்றனர்கள். நேரம் போனதே தெரியவில்லை.

**உங்களது பொழுதுபோக்கு**

எனக்கு இளையராஜா பாடல்கள் மிகவும் பிடிக்கும், மற்றும் சமையல் செய்ய பிடிக்கும்.





ஓவியம்: 563 துண்டுகளைப் பயன்படுத்தி கட்டப்பட்ட சரக்கு லாரி (Dump Truck)







கவுதம் செந்தில்
நிலை 1 "B"



**நம் தேசியப் பறவையில் மறைந்துள்ள எழுத்துக்களைக் கண்டுபிடியுங்களேன்!**



மித்ரமதி, நிலை 2 "A"



**உங்களைப் பற்றி**

"தமிழுக்கும் அமுதென்று பேர் அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்பது வெறும் பேச்சு அல்ல. தமிழ் நம் அடையாளம், நம் அனைவரையும் இணைக்கும் மெல்லிய நூல். அதை சற்றே வலிமையாகப் பற்றிக்கொண்ட ஒரு சராசரி தமிழ் உணர்வாளர் நான். யான் பெற்ற இன்பம் நம் பிள்ளைகளும் பெற வேண்டும் என்பதும் ஒரு உந்துதல். அறிவால், தொழிலால் ஆசிரியர் இல்லை என்ற போதிலும், நம் கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், வாழ்வியல் நெறிகள் அறிந்த நாம் ஒவ்வொருவரும் ஆசிரியரே என்று என் போன்ற ஆர்வலர்களை உவகையுடன் அரவணைத்துக் கொண்டது சங்கமம் தமிழ்ப்பள்ளி. இப்பள்ளியின் தொடக்கம் முதலே இதன் அங்கமாக உள்ளேன். நரை தள்ளும் காலம் வரை தமிழ்ச் சேவை ஆற்றவே விழைகிறேன்.



மஞ்சு ஐய்யம்பாளையம்
(நிலை 7)

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

ஏறத்தாழ 8 ஆண்டுகளாக அவர்களுடன் பயணிப்பது ஆனந்தம்

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

பதின்ம வயதுப் பிள்ளைகளானாலும் இன்னும் தேங்காய், தென்னைமரம் விளையாடுவது 

**உங்களது  பொழுதுபோக்கு**

வாசித்தல், இசை, word games and puzzles.

---

**உங்களைப் பற்றி**

மென்பொறியாளராக பணி புரிந்து கொண்டிருந்தேன். தற்பொழுது குடும்ப தலைவி. "அகிலா கண்ணன்" என்ற பெயரில் நான் வலைதளங்களில் கதைகள் எழுதி கொண்டிருக்கிறேன். இதுவரை நான்கு புத்தகங்கள் வெளியாகி உள்ளன.



சசி அகிலா
(நிலை 3)

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

குறும்புத்தனம் மிகுந்த புத்திசாலித்தனமான குழந்தைகள்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

விளையாட்டு மூலமாக படிப்பது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். குழந்தைகள் கூறும் கதைகள் அனைத்தும் சுவாரஸ்யமாக இருக்கும்.

**உங்களது  பொழுதுபோக்கு**

சிறுவர்களுக்கான கதைகளை அனிமேஷன் மூலமாக வீடியோவாக செய்வது என் பொழுதுபோக்கு. பேச்சு போட்டி, பட்டிமன்றம், நாடகம் எழுதுதல் இதெல்லாம் என் பொழுது போக்கு.

---

**உங்களைப் பற்றி**

குழந்தைக்கு பாடம் சொல்லித் தருவது பிடிக்கும்.



சர்மிளா பழனி
(நிலை 3)

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

துடுக்குத்தனமாக சேட்டை செய்து விட்டு அதை சமாளிக்கும் குழந்தைகளின் சாமார்த்தியசாலித்தனம் அழகு.சேட்டை செய்ததாலும் அருமையாக படிக்கும் குழந்தைகள்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

சில குழந்தைகள் அமைதியான குணம் உடையவர்கள்.சிலருக்கு பேசுவது மிகவும் பிடிக்கும். ஒரு சிறுமி கதை சொல்கிறேன் என்று ஒரு திரைப்பட கதையை முழுவதும் சொல்லி அதில் வரும் பாட்டும் பாடினாள்.அனைத்து குழந்தைகளும் கேட்டு மகிழ்ந்தனர்.

**உங்களது  பொழுதுபோக்கு**

தோட்டகலை,சமைப்பது. குழந்தைகளிடம் நேரம் செலவளிக்க மிகவும் பிடிக்கும்.

**உங்களைப் பற்றி**


நான் சென்னையில் பிறந்தேன், என் குழந்தை பருவத்தில் சென்னை உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்ந்தேன். நான் கோயம்புத்தூரில் உள்ள அவினாஷிலிங்கம் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் / வேதியியலில் தேர்ச்சி பெற்றேன், மென்பொருள் பொறியியலில் முதுநிலை முடித்தேன். 2004 இல் இருந்து இங்கு வசித்து வருகிறேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

என் மாணவர்களை எனக்கு மிகவும் பிடிக்கும். வகுப்பறைக்குள் விளையாட்டுகளிலும், வகுப்பறைக்கு வெளியே கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளிலும் தீவிரமாக பங்கேற்கிறார்கள் .

**உங்களது பொழுதுபோக்கு**

திரைப்படங்கள் பார்ப்பது, இசை கேட்பது.



Meenakshi
(நிலை 2A)

**உங்களைப் பற்றி**

என் உலகம், என் குடும்பம். நான் ஒரு புத்தக புழு. எனக்கு தமிழ் பள்ளி ஒரு ஆத்ம திருப்தியை கொடுத்துள்ளது. அதற்காக தமிழ் பள்ளிக்கு என் மனமார்ந்த நன்றி.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

என் மாணவ கண்மணிகளை பற்றி - இந்த வகுப்பு மாணவர்களுடன் 3 வருடங்கள் இருந்துள்ளேன், தன்னார்வலராகவும், ஆசிரியராகவும். சிறுவயதானாலும் பெரும் திறன் படைத்தவர்கள்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

திரு. லோகநாதன் அவர்கள் தமிழில் “word scramble” விளையாடுவார். மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கெடுப்பர்.

**உங்களது பொழுதுபோக்கு**

புத்தகம் படிப்பது



Revathi Muthusamy
(நிலை 4B)

**உங்களைப் பற்றி**

நான், என் கணவர் எங்களுக்கு இரு குழந்தைகள். எனது சொந்த ஊர் தமிழ் வளர்த்த மதுரை. பள்ளி கல்லூரி படிப்புகளை மதுரையில் முடித்து , இங்கு அமெரிக்காவில் software engineer ஆக பணிபுரிந்து வருகிறேன்.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

Nilai 1 B வகுப்பு மாணவர்கள் எழுத்து பயிற்சி, பாடல் கதை ஆர்வம் கொண்டவர்கள். தமிழ் ஆர்வம் தவிர ஓவியம் வரைவதில் திறமை கொண்டவர்கள். மாணவர்களின் பெற்றோர்கள் தமிழ் ஆர்வம் கொண்டவர்கள்.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**

ஒரு சுவாரசியமான நிகழ்வு, ஒரு நாள் வகுப்பில் ஒரு கதை படித்து பிறகு அதை மனனம் செய்தோம், அது ஒரு அந்தாக்ஷரி போல, ஒருவர் ஒரு வரி முடிக்க அடுத்த குழந்தை கதையின் அடுத்த வரி ஆரம்பிக்கும் படி செய்தோம். அதை உடனே கற்ற கொண்டு அழகாய் கதையை ஒரு விளையாட்டு போல சொல்லி முடித்தார்கள்.



சங்கீதா அறிவரிஞன்
(நிலை 1 B )

**உங்களது பொழுதுபோக்கு**

எனக்கு சமையல் ஆர்வம் அதிகம், அதை blogging செய்வது, YouTube பதிவேற்றம் செய்வது எனது பொழுதுபோக்கு.

**உங்களைப் பற்றி**
பிறந்தது வளர்ந்தது சென்னையில். எனக்கு தமிழ் பிடிக்கும்.யாம் பெற்ற இன்பம் இவ்வயகம் பெறுக என்பதுபோல், நான் கற்ற தமிழை நம் பள்ளி பிள்ளைகளுக்கும் கற்பிக்கிறேன். ஆசிரியராக பணிபுரிய வாய்ப்பளித்த சங்கமம் பள்ளிக்கு என் மனமார்ந்த நன்றிகள்!

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
என் வகுப்பில் ஒவ்வொரு குழந்தையும் தனி திறன் கொண்டவர்களே! அவர்களின் சிரிப்பும் பேச்சுமே தனி அழகுதான். அவர்களின் தமிழ் ஆர்வம் மென் மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

**உங்களது பொழுதுபோக்கு**
சமைத்தல், தையல் கலை, என் குடும்பத்துடன் நேரம் செலவிடுதல்.



ஹரிதா தயாளன்
(நிலை 1A)

**உங்கள் பெயர்: வினுப்ரியா சாந்தகுமார்**
**வகுப்பு:** பேச்சு பயிற்சி

**உங்களைப் பற்றி**
"உலகச் செம்மொழிகளில் ஒன்றாகத் திகழும் நம் தமிழ் மொழி இன்றுவரை உயிர்ப்புடன் இருக்கும் பழைய மொழிகளில் முன்னணியில் உள்ளது. பல
காரணங்களுக்காக புலம்பெயர்ந்து வந்துள்ளோம். புலம்பெயர் சூழலில் நம் குழந்தைகள் நம் தமிழ் மொழியை மறந்துவிடக்கூடாது, நம் மொழியை வளர்க்க வேண்டும் என்ற ஆசையில் சங்கமம் தமிழ்ப்பள்ளியில் ஆர்வலராக இருந்து வருகிறேன்."

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
"மிக அருமையான மொட்டுக்கள். தமிழில் பேச நல்ல ஆர்வம் காண்பிக்கிறார்கள்."

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**
தமிழில் ஒரு வார்த்தை கொடுத்தால், அவர்கள் அவர்களது கற்பனைத்திறன் கொண்டு நாம் வியந்து போகும் அளவிற்கு ஒரு கதை வரைந்துவிடுகிறார்கள்.

**உங்களது பொழுதுபோக்கு**
இசை, ஓவியம்

**உங்களைப் பற்றி**
நான் கடந்த 5 ஆண்டுகளாக எங்கள் சங்கமம் தமிழ் குடும்பத்தில் ஒரு தீவிர தொண்டராக இருந்து வருகிறேன், இந்த குடும்பத்தின் ஒரு பகுதியாக இருப்பதை மிக விரும்புகிறேன். நாம் வளர்ந்து ஒற்றுமையாக இருப்பது மகிழ்ச்சி.

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**
ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானவர்கள். அவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதை பார்ப்பதில் மகிழ்ச்சி.

**வகுப்பில் நடந்த ஏதேனும் சுவாரஸ்யமான சம்பவம்**
ஒவ்வொரு வாரமும் ஒரு தனித்துவமான அனுபவம். அவர்கள் தமிழில் பேச முயற்சிப்பதைப் பார்க்கும்போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

**உங்களது பொழுதுபோக்கு**
பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் நண்பர்களைச் சுற்றி இருக்க விரும்புகிறேன். 'கோவிட்' உடன், நான் தாவரங்கள் மற்றும் இயற்கையைச் சுற்றி இருப்பதைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.



கீர்த்திகா உலகநாதன்
(பேச்சு பயிற்சி )

# வீரமாமுனிவர்

பற்றி நான் பேசிய சில வரிகள்.............






**இந்தியாவில்**

இவர் இத்தாலி இருந்து புறப்பட்டு 1710 சூனில் கிறித்தவ மதப் பரப்புப் பணி செய்ய கோவா வந்து சேர்ந்தார்

**தமிழகத்தில்**

தமிழ்நாடு செல்லத் திட்டமிட்டு, கொச்சி வந்து

அங்கிருந்து கால்நடையாக அம்பலக்காடு வந்து தங்கி; மதுரையில் காமநாயக்கன்பட்டி வந்து சேர்ந்தார்

**பெயர்மாற்றம்**

தமது பெயரினை *தைரியநாதசாமி* என்று முதலில் மாற்றிக் கொண்டார். பின்னர், அப்பெயர் வடமொழி என்பதாலும், நன்கு தமிழ் கற்றதாலும், தமது இயற்பெயரின் பொருளைத் தழுவி, செந்தமிழில் *வீரமாமுனிவர்* என மாற்றிக் கொண்டார்

**தமிழ்ப் பணி**

தமிழ் மக்களுக்கு இறைபணி ஆற்ற வேண்டும் என்றால் தமிழ் மொழியில் பேச வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்

இவர் தமிழகம் வந்தபின், சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியம் கற்று, இலக்கியப் பேருரைகள் நடத்துமளவுக்குப் புலமை பெற்றார்

இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால் சுவடி சாமியார் எனவும் அழைக்கப்பட்டார். இவற்றில் காண அரிதான பல பொக்கிசங்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது

தமிழின் சிறப்பை மேல் நாட்டார் உணர திருக்குறள், தேவாரம், நன்னூல், ஆத்திசூடி போன்ற நூல்களை பிற ஐரோப்பிய மொழியில் வெளியிட்டார்

மெய்யெழுத்துகளுக்கு புள்ளி வைக்காமலே எழுதுவது வழக்கம். புள்ளிக்குப் ஈடாக நீண்ட கோடிருக்கும். மேலும் குறில், நெடில். "ஆ" என எழுத "அர" என 2 எழுத்துக்கள் வழக்கிலிருந்தது. இந்த நிலையை மாற்றி "ஆ, ஏ" என மாறுதல் செய்தவர் இவர்

**பிற தமிழ் படைப்புகள்**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார்

"பரமார்த்த குருவின் கதை" என்ற நூல் முதல்முறையாக இவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும்

இயேசு கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளை தேம்பாவணி என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளது

தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு

**வீரமாமுனிவரின் இறப்பு**

1747ஆம் ஆண்டு பெப்ருவரி நான்காம் நாளில் தமது 67 ஆம் வயதில் உயிர்துறந்தார்

**பெயர்: சௌந்தர்யா சீனிவாசன்**

**பள்ளி: சங்கமம்**

**நிலை: 2, வயது: 7**



23 நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார்

தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்து வந்தன. அவற்றை மக்கள் எளிதில் படித்தறிய முடியவில்லை என்பதனை உணர்ந்து உரைநடையாக மாற்றியவர் இவர்

| | அக்காலத்தில் சுவடிகளில் | இன்று |
|---|---|---|
| மெய் எழுத்துக்கள் | ந | ந் |
| குறில், நெடில் | உர | ஊ |

# சங்கமம் பாடத்திட்டக் குழு - ஒரு பார்வை



சங்கமம் தமிழ்ப் பள்ளியில் தொடக்க காலத்திலிருந்தே ஒவ்வொரு நிலை வகுப்பிற்கும் நம் பள்ளியின் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்களையே பயன்படுத்தி வருகிறோம்.

கடந்த 2018-ம் வருடம் "**பாடத்திட்ட குழு**" உருவாக்கப்பட்டது.

**பாடத்திட்ட குழு** உறுப்பினர்கள் :

ஆர்த்தி கார்த்தி
ஐஸ்வர்யா ஸ்ரீனிவாசன்
கீர்த்திகா உலகநாதன்
மஞ்சு அய்யம்பாளையம்
மோகன்ராஜ் சண்முகம்
நீதிதேவன் தண்டபாணி
சாந்தகுமார்
ஸ்ரீனிவாஸ் சுந்தரகோபால்
வினு சாந்தகுமார்

ஒவ்வொரு வருடமும் அனைத்து வகுப்பு ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களின் கருத்து மற்றும் அவர்கள் குறித்து வைத்துள்ள சிறு திருத்தங்களுடன் , நமது பள்ளியின் இறுதி இலக்கான கவுண்டி தேர்வுக்கு தயார் படுத்தவும் தேவையான மாற்றங்களை ஒவ்வொரு நிலை புத்தகங்களிலும் கொண்டு வருவதே இந்தக் குழுவின் நோக்கமாகும்.

அனைத்து வகுப்பு புத்தகங்களையும் சரியான நேரத்தில் புதுப்பிக்க உதவும் பொருட்டு 2019-இல் "**பாடத்திட்ட உதவிக்குழு**" உருவாக்கப்பட்டது

**பாடத்திட்ட உதவிக்குழு** உறுப்பினர்கள் :

ராணி சுதாகர்
ஹரிதா தயாளன்
இளவரசு நாராயணசாமி
காமேஸ்வரன் சிவலிங்கம்
நித்யா சச்சிதானந்தம்
ஹேமந்த் குமார் ஈர்ப்பிணி குப்பாடு
கலைவாணி மகேஷ்
கவிதா மனோஜ்குமார்
அனிதா பாபு
சோஃபியா ஜேம்ஸ்
ராஜேஷ் குமார் தேவன்
பிரபாகர் ரவீந்திரன்
சங்கீதா ரவிக்குமார்
யோகேஸ்வரி கோபிகிருஷ்ணா
நர்மதா துரைசாமி
கவிதா தியாகு
வள்ளியம்மை பாலாஜி

உதவிக்குழு உறுப்பினர்கள் பாடத்திட்ட குழுவுடன் இணைந்து ஒவ்வொரு நிலை புத்தகங்களையும் வடிவமைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள். பல உறுப்பினர்கள் ஆசிரியர் மற்றும் பிற குழுக்களிலும் சேவையாற்றிக்கொண்டு இதையும் செய்து முடிப்பது போற்றுதலுக்குரியது. இந்த இரண்டு குழுக்களின் விடா முயற்சியின் பலனே நமது குழந்தைகளின் கைகளில் புத்தக வடிவில் உள்ளது என்றால் மிகையாகாது.

- சாந்தகுமார்

## சங்கமம் ஆசிரியர்கள் - 2019-2020

**உங்களைப் பற்றி**

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்" எனும் வழியில் சங்கமம் தமிழ் பள்ளியில் தமிழ் பயிற்றுவிப்பதில் பெரும் மகிழ்வு கொள்கிறேன்



பிரபாகரன் ரவீந்திரன்
(நிலை 5B)

**உங்களைப் பற்றி**

தமிழில் சற்றே ஆர்வம். கற்றுக் கொடுக்க முயலும்போது பல விஷயங்களை கற்க வாய்ப்பு கிடைப்பதால், பள்ளி துவக்கத்தில் இருந்து ஆசிரியராக, ஆர்வலராக இருப்பதில் மகிழ்ச்சி.



மோகன்ராஜ் ஷண்முகம்
(நிலை 6)

**உங்களைப் பற்றி**

எனக்கு நடனத்தின் மீது மிகுந்த ஆர்வம். நான் ஒரு சர்வதேச உரிமம் பெற்ற ஜூம்பா பயிற்றுவிப்பாளர். கொஞ்சம் பாடவும் தெரியும். எப்போதும் புன்னகையையே விரும்புபவள். மக்களுடன், மிக முக்கியமாக குழந்தைகளுடன் பழகுவது மிகவும் பிடிக்கும். அதனால் தான் ஒரு ஆசிரியராக பணியாற்றுகிறேன்



ராஜேஸ்வரி கார்த்திக்
(பேச்சு பயிற்சி )

**உங்களைப் பற்றி**

சங்கமம் தமிழ் பள்ளிக்கு வரும் அனைத்து குழந்தைகளும் தமிழில் எழுதவும் சரளமாக பேசவும் வேண்டும் என்ற நோக்கில் கடந்த 5 வருட காலமாக தமிழ் பயிற்றுவித்து வருகிறேன். குழந்தைகளுக்கு கற்று கொடுக்கும் பொழுது நாம் படித்ததை நினைவு கூறவும், மேலும் கற்கவும் முடிகிறது. அதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி



சோஃபியா ஜேம்ஸ்
(நிலை 3)

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

மழலையின் புன்னகையும், குறும்புகளும், கொஞ்சி விளையாடும் விளையாட்டுகளும், அவர்களுடன் ஆடி பாடி மகிழ்வதும் எங்கள் பணியை மகிழ்ச்சியுடன் செய்வதற்கு ஊக்கமாக உள்ளது.



அனித்தா பாபு
(மழலை)

**உங்கள் மாணவர்களை பற்றி ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்..**

நம் பள்ளியிலேயே மிகச்சிறந்த வகுப்பு நம் மழலை வகுப்புதான். பிள்ளைகள் ஆர்வமும் உற்சாகமும் கொண்டு வகுப்பில் பங்கேற்பார்கள். அவர்களின் சேட்டை வேடிக்கையும் விளையாட்டும் நிறைந்ததாக இருக்கும். அவர்களின் மழலைப் பேச்சும் சிரிப்புமே போதும் ஆசிரியர்களை ஊக்குவிக்க.



சுஜா இளங்கோவன்
(மழலை-ஆ )

# VOLUNTEERS 2019-2021

| **Board of Directors** | **Substitute Teachers** | **Teachers Support** |
|---|---|---|
| ஐஸ்வர்யா சீனிவாசன் | அகிலா ராமநாதன் | அல்லி திருமாவளவன் |
| நீதிதேவன் தண்டபாணி | காயத்ரி தண்டபாணி | அனிதா நாதன் |
| ரேகா கருணாகர பாண்டியன் | குருமஹாலட்சுமி | அனுஸ்ரீ ரெட்டி |
| சீனிவாஸ் சுந்தரகோபால் | குமார் தியாகராஜன் | அர்ச்சனா Ê சுந்தரராஜன் |
| சுந்தர் சித்தன் | மஞ்சு சுவாமிநாதன் | பானு பிரியா புக்கா |
| | நீதிதேவன் தண்டபாணி | கணேஷ் மணிவண்ணன் |
| **Curriculum Committee** | பிரேமலதா வெங்கடேசன் | காயத்ரி தண்டபாணி |
| ஆர்த்தி கார்த்திக் | சாந்தகுமார் | ஹேமந்த் எர்பினி குப்பாடு |
| ஐஸ்வர்யா சீனிவாசன் | உத்ரா சந்திரசேகரன் | இந்திரா மருசாமி |
| கீர்த்திகா பிரபாகர் | | கார்த்திகேயன் பெருமாள் |
| மஞ்சு அய்யம்பாலயம் | **Event Coordinators** | மணிகண்டன் தியாகராஜன் |
| மோகன்ராஜ் சண்முகம் | கார்த்திக் பத்மநாபன் | மஞ்சு பாஷினி சுவாமிநாதன் |
| நீதிதேவன் தண்டபாணி | அபர்ணா வினோத் | நடாஷா கார்த்திக் |
| சாந்த குமார் | சந்தியா பிரபு | நித்ய ராஜராமன் |
| சீனிவாச சுந்தரகோபால் | யோகலட்சுமி பத்மநாபன் | பசும்கிலி நாகரெத்தினம் |
| வினுபிரியா சாந்தகுமார் | ஜெயஸ்ரீ குமார் | சமீரா அமினுதீன் |
| | குமார் பார்த்தசாரதி | சங்கீதா பார்த்தசாரதி |
| **Curriculum Support** | செய்ய கரீம் | சங்கீதா ஸ்ரீனிவாசன் |
| அருண் ராமசுப்பிரமணியன் | சீதா அருண் | சத்யன் முனிரத்னம் |
| பாலாஜி சிதம்பரம் | ஜனனி கணேசன் | செந்தில் ஏழுமலை |
| தீபா முத்துகுமாரன் | கிர்த்திகா பிரியதர்ஷினி | ஷீபா ராஜமாணிக்கம் |
| ஹேமந்த் எர்பினி குப்பாடு | | ஸ்ரீதர் சுவாமிநாதன் |
| கமல்பாபு | **Drawing Competition** | சுதாகர் ஆறுமுகம் |
| லட்சுமி குமார் | ஷீபா | சூர்ய செல்வராஜு |
| நர்மதா துரைசாமி | ராஜேஸ்வரி கார்த்திக் | உதயநிதி பொய்யாமொழி |
| சாந்தகுமார் | ரேகா கமல்பாபு | வெங்கட்ராமன் |
| சண்முகம் லோகநாதன் | பழனி ராமசாமி | விஜி சோமு |
| உத்ரா சந்திரசேகரன் | கார்த்திக் | யோகலட்சுமி |
| வள்ளியம்மை நாச்சியப்பன் | அபிராமி சதிஷ் | |

# VOLUNTEERS 2019-2021

| Facility | Thirukkural Competition | NewsLetter |
|---|---|---|
| அனுஸ்ரீ ரெட்டி | ஞானவேல் ராமலிங்கம் | பழனியப்பன் அண்ணாமலை |
| அரிவானந்தம் ராஜாராமன் | செந்தில்குமார் ஏழுமலை | ஈஸ்வரமூர்த்தி |
| பாக்கியராஜ் வெங்கடாச்சலம் | மலர் நாச்சியப்பன் | கீதா ஷண்முகம் |
| சந்திரமோகன் | | ராஜேஷ் |
| துரை முத்துசாமி | **Food** | |
| ஜெயவேலன் ஜெயபாலன் | கார்த்திக் பத்மநாபன் | **Treasure Chest** |
| காளிதாஸ் கருணாமூர்த்தி | துரை | கவிதா தியாகு |
| பரமசிவன் மாதவன் | பாக்கியராஜ் | பிரேமலதா ராமதுரை |
| ராதாகிருஷ்ணன் | வைரமணி | ராஜ்குமார் தங்கவேலு |
| ராஜேஷ் குமார் தேவன் | சுந்தர் | செந்தில் வடிவு நல்லசாமி |
| ரவிச்சந்திரன் கே | சம்பத்குமார் ஸ்வாமிநாதன் | தியாகு முத்துசாமி |
| சம்பத்குமார் சுவாமிநாதன் | இந்திரா மறுசாமி | கதிர் |
| சதீஷா சிவகுழந்தை | நித்யா ராஜாராம் | |
| ஷியாம் சுந்தர் ராஜமடம் | | **STS Website & FaceBook** |
| வைரமணி பொன்னுச்சாமி | **STS Library** | நிர்மலா |
| யோகலட்சுமி | ஷீபா பிரேம் | ஷியாம் சுந்தர் ராஜமடம் |
| சுரேஷ்குமார் கணேசன் | அபிராமி விஜயராகவன் | ரம்யா ராக்கி |
| கோமதிநாயகம் | | குமார் பார்த்தசாரதி |

| Pechu potti | Ethics | Photo/Video |
|---|---|---|
| சுசீலா கணேசன் | யோகலக்ஷ்மி பத்மநாபன் | சம்பத்குமார் |
| ராஜஸ்ரீ சண்முக சுந்தரம் | சுகன்யா ராம்குமார் | சரவண பவன் |
| மலர் | செய்ய கரீம் | |
| | அகிலா | |

**நம் பள்ளிக்கு ஆதரவு அளிக்க – Use smile.amazon.com at no extra, support your Sangamam Tamil School**

amazonsmile
You shop. Amazon gives.